**1கொரிந்தியர்**

**வாசிக்க: 1கொரிந்தியர் 1:1-31**

இதன் ஆசிரியர் பவுல் ஆவார். சொஸ்தேனேயுடன் இணைந்து பவுல் எழுதினார். எழுதப்பட்ட காலம் கி.பி 55-56 வரையுள்ள காலகட்டத்தில், பவுலின் மூன்றாவது மிஷனரி பயணத்தின் இறுதியில் எபேசு பட்டணத்திலிருந்து எழுதப்பட்டது. இந்த புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கம் கொரிந்து சபையில் உள்ள மக்களுக்கு இருந்த பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுக்கவும், கேள்விகளுக்கு பதில் கொடுக்கவும், சந்தேகங்களுக்கு விளக்கம் கொடுக்கவும், ஒழுக்க சீர்குலச்சலை சரி செய்யவும், கர்த்தருக்கென்று வாழ்வது எப்படி? என்று சொல்லி கொடுப்பதற்காக எழுதப்பட்டது.

திறவுகோல் வசனங்கள்: 1:10, 12:12,13,27.

இப்புத்தகம் எழுதப்பட்ட சூழல் பவுல் தன்னுடைய இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது இங்குள்ள சபையை ஸ்தாபித்தார். இந்த நகரம் ஒரு துறைமுக நகரமாகும். எனவே பலதரப்பட்ட மக்கள் இங்கு வசித்துவந்தனர். கொரிந்து சபையில் உள்ள மக்கள் பெரும்பாலும் புறஜாதி (யூதர் அல்லாதவர்கள்) மக்களாக இருந்தார்கள். இவர்களுக்குள் பல பிரச்சனைகளும், பிரிவினைகளும் இருக்கிறது என்று கேள்விப்பட்ட சூழலில் இந்த நிருபம் எழுதப்பட்டது.

இந்நூலின் சிறப்பு உபதேசத்தை பற்றியதான கேள்விகளுக்கும், சபையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கான கேள்விகளுக்கும் இப்புத்தகம் பதில் சொல்லுகிறது. ஆவிக்குரிய வரங்கள், ஆவியோடும் கருத்தோடும் ஆராதிப்பது எப்படி? சுயநலமற்ற அன்பு கூறுவது, உயிர்த்தெழுதல் போன்றவற்றைப் பற்றி விளக்கமாக எழுதப்பட்டுள்ளது இந்நூலின் சிறப்பாகும்.

இப்புத்தகத்தின் மையக்கருத்து கர்த்தருடைய மக்கள் பிரிவினையோடு இல்லாமல் ஒன்றாக இருக்க வேண்டும். 1:12-13. தேவனுடைய இராஜ்யம் பேச்சில் அல்ல, பெலத்தில் இருக்கிறது. 4:20. பாவத்தில் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்களை ஐக்கியத்திலிருந்து விளக்க வேண்டும். 5:1-13. பாவத்தில் தொடர்ந்து வாழ்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் வரமுடியாது. 6-9,10. விவாகரத்து நல்லதல்ல. 7:10-16 விக்கிரகத்துக்கு படைக்கப்பட்டவற்றை நாம் உண்ணுதல் சரியல்ல. 8:1-13. கர்த்தருடைய பந்தி. 11:27-32. அன்பு எல்லாவற்றையும்விட சிறந்தது. 13:1-13. ஆவிக்குரிய வரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். 14:1-39. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது உயிரோடு இருக்கும் கர்த்தரின் பிள்ளைகள் உயிருடன் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். 15:51-57. போன்ற காரியங்கள் இப்புத்தகத்தின் மையக்கருத்தாகும்.

**கேள்விகள்:**

1. கர்த்தருடைய மக்கள் எப்படி இருக்க வேண்டும்?

2. அன்பு எப்படிப்பட்டது?

3. தேவனுடைய இராஜ்ஜியம் எதில் இருக்கிறது?